

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நேற்று (09.12.2025) இராயபுரம் மண்டலம், வால்டாக்ஸ் சாலையில் கட்டப்பட்டு வரும் சமுதாயக் கூடத்தினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் அரசு அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்! கொளத்தூரில்

# ரூ.25.72 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடத்தின் இறுதிக் கட்டப் பணி!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு செய்தார்!

சென்னை, டிச.10-

பேரறிஞர் அண்ணா பெயரில் 18.12.2025 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ள கொளத்தூர், ஜி.கே.எம் காலனியில் ரூ.25.72 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய சமுதாய நலக்கூடத்தின் இறுதிக்கட்டப் பணிகளை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் வருகின்ற 18.12.2025 அன்று கொளத்தூர், ஜி.கே.எம் காலனி, ஜம்புலிங்கம் பிரதான சாலையில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.25.72 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பேரறிஞர் அண்ணா பெயரில் திறக்கப்படவுள்ள புதிய சமுதாய நலக் கூடத்தின் இறுதிக் கட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து நேற்று (09.12.2025) இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து, அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து கண்காணித்திட தொடர்புடைய அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இந்த சமுதாயக் கூடம் 40,300 சதுரடி பரப்பளவில் தரைத்தளத்தில் கார், இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் வகையில் வாகனங்கள் நிறுத்தும் வசதிகளுடனும், முதலாவது தளத்தில் ஒரே சமயத்தில் 435 நபர்கள் அமர்ந்து உணவு சாப்பிடும் வகையில் உணவுக்கூடம், இரண்டாவது தளத்தில் 800 இருக்கைகளுடன் திருமண மண்டபம் மூன்றாம் தளத்தில் 10 எண்ணிக்கையிலான தங்கும் அறைகள் வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், இராயபுரம் மண்டலம், வார்டு57க்குட்பட்ட வால்டாக்ஸ் சாலையில் மாநகராட்சி சார்பில் ரூ.8.55 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சமுதாயக் கூடக் கட்டுமானப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, வட சென்னைப் பகுதிக்குட்பட்ட மக்களுக்கு பெரிதும் பயன்தரும் வகையில் நவீன வசதிகளுடன் உயர்தரமாக கட்டப்பட்டு வரும் இந்த சமுதாயக் கூடங்களில் பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டு வருமாறு மாநகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்தக் கட்டடமானது, தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் 28,500 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது. மேலும், தரைத்தளத்தில் 30 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 50 எண்ணிக்கையில் இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வகையில் வாகன நிறுத்து மிடம், முதல்தளத்தில் உணவருந்தும் கூடம், சமையலறை மற்றும் கழிப்பறை வசதிகள், இரண்டாம் தளத்தில் திருமண நிகழ்விடம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது.

பின்னர், வார்டு 57க்குட்பட்ட பிராட்வே, டேவிட்சன் தெருவில் சென்னை குடிநீர் வாரியம் சார்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் குடிநீர் தேக்க நிலையத்தின் முன்னேற்றப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வுகளின்போது கூடுதல் தலைமைச் செயலாளர்/தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், வட்டார துணை ஆணையாளர்க்ள் எச்.ஆர். கௌஷிக், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு), மண்டலக் குழுத்தலைவர்கள் திருமதி சரிதா மகேஷ் குமார், பி.ஸ்ரீரா முலு, மாமன்ற உறுப்பினர்கள் எ.நாகராஜன், திருமதி பி.அமுதா, உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.



இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சட்டமேதை அண்ணல் அம்பேத்கார் அவர்களின் 69 வது நினைவு நாளை முன்னிட்டு 06.12.2025 அன்று மேலப்பாளையம் நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் ஆ.பிரபாகரன், கணேஷ்குமார் ஆதித்தன், தயாசங்கர், செல்வ சூடாமணி, பிரேம் ஆனந்த், மாடசாமி, சரவண மணிமாறன், அண்ணாதுரை,கோட்டை ராஜா, நெல்லை பாலகிருஷ்ணன் ஆகியோர் உள்ளனர்.

### திண்டுக்கல் மாவட்டம் – திருஆவினன்குடி

# குழந்தை வேலாயுத சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு!

## அமைச்சர்கள் அர.சக்கரபாணி – பி.கே.சேகர்பாபு பங்கேற்றுச் சிறப்பித்தனர்!

சென்னை, டிச.9-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, உணவு, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் அர. சக்கரபாணி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (08.12.2025) திண்டுக்கல் மாவட்டம், பழனி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருஆவினன்குடி குழந்தை வேலாயுத சுவாமி திருக்கோயிலின் குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் பெருமக்கள் 2025-26 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற அறிவிப்புகளை நிறைவேற்றிடும் வகையில் மலைக் கோயிலில் மாற்றுத்தினாளிகளுக்கான வசதிகளையும், திருக்கோயில் சார்பில் நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் விடுதி மாணவ, மாணவியருக்கு கட்டணமில்லாமல் உணவு வழங்குதல், அனைத்து மாணவர்களுக்கும் கல்வி உபகரணங்கள் வழங்குதல் மற்றும் கண் பரிசோதனைத் திட்டம் ஆகியவற்றை தொடங்கி வைத்தனர்.

மேலும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கொடைக் கானல் குறிஞ்சி யாண்டவர் திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தை நேற்று தொடங்கி வைத்தார்.

### கும்பகோணம் தொகுதியில் மட்டும்

# ஆறு கோடி மகளிர் இதுவரை விடியல் பயணம்!

## மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. தகவல்!

தஞ்சை, டிச.10-

முதலமைச்சர் உத்தரவின்படியும், போக்குவரத்துத்துறை அமைச்சர் வழிகாட்டுதலின்படியும், கும்பகோணம் அருகே தேவனாஞ்சேரி கடைவீதியில் கும்பகோணத்திலிருந்து அசூர், கடிச்சம்பாடி, நீலத்தநல்லூர் வழியாக கொத்தங்குடி வரை செல்லும் புதிய நகர பேருந்து துவக்க விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக தஞ்சாவூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழ கன் எம்.எல்.ஏ. பங்கேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார். தொடர்ந்து பொதுமக்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கி சிறப்பித்தார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த எம்எல்ஏ சாக்கோட்டை அன்பழகன் கூறியதாவது,

தமிழ்நாடு முதலமைச்சரின் பெரும் முயற்சியால் இதுவரை நான்கரை ஆண்டுகளில் மக்கள் விரும்புகிற பல்வேறு திட்டங்களை செயலாற்றி அனைவரின் மனதிலும் நீங்காத இடம் பெற்றுள்ள முதலமைச்சரும், துணை முதலமைச்சரின் பெரும் முயற்சியால் நம்முடைய பகுதியில், குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தில் மகளிர் விடியல் பயணத்துக்காக இதுவரை 199 பேருந்துகள் இயக்கியிருந்தாலும் அதில் புதிய பேருந்துகளாக 153 பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளது. இதில் 153வது பேருந்தை தற்போது இயக்கி வைத்துள்ளேன். இதில் சிறப்பென்றால் இதுவரை இந்த மாவட்டத்தில் 27 கோடி மகளிர்கள் பயணம் செய்துள்ளனர். குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் கும்பகோணம் தொகுதியில் மட்டும் ஆறு கோடி மகளிர்கள் இதுவரை விடியல் பயணம் இந்த அரசால் செய்துள்ளார்கள் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனைத்தொடர்ந்து பல்வேறு பணிகளை தொடங்கி வைக்க உள்ளேன். இதில் நெடுஞ்சாலை துறை மூலமாக ரூ.3 கோடி மதிப்பீட்டில் கும்பகோணம் அம்மாபேட்டைக்கு மிகப்பெரிய சாலையை துவக்கி வைக்கிறோம். முதலமைச்சரின் உங்களுடன் ஸ்டாலின் மூலமாக ஏற்கனவே ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு கலைஞரின் உரிமை தொகை வழங்கிய இந்த அரசு, மீதமுள்ள மகளிருக்கும் வழங்க வேண்டும் என்ற முயற்சியில் அந்த முகாம் மூலமாக வாங்கப்பட்டுள்ள மனுக்களுக்கு வருகிற 15ம் தேதி மீண்டும் ஆயிரம் ரூபாய் வழங்க இருக்கிற நல்ல அரசு நம்முடைய முதலமைச்சரின் அரசு. அதனுடைய துறையை வைத்துள்ள துணை முதலமைச்சரும் சமீபத்தில் சட்டமன்றத்தில் கூறியுள்ளார். அதற்கான உத்தரவு வந்துள்ளது. அது மட்டும் இல்லாமல் தாயுமானவர் என்ற அருமையான திட்டத்தை முதலமைச்சர் துவக்கி உள்ளார். வயது முதிர்ந்தவர்களுக்கு இல்லத்திற்கே சென்று ரேஷன் பொருட்கள் வழங்கும் திட்டம். அதோடு மற்றொரு திட்டமாக அன்பு கரங்கள் என்ற திட்டத்தை யும் முதலமைச்சர் தொடங்கியுள்ளார். ஆதரவற்ற குழந்தைகளை அரசு தத்தெடுத்து 18 வயது வரை மாதம் ரூ.2000 வழங்கி காப்பாற்றுகிற நல்ல அரசு இந்த அரசு என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், ஜெ. சுதாகர், மாவட்டப் பிரதிநிதி டி.என்.கரிகாலன், கும்ப கோணம் கோட்ட மண்டல துணை மேலாளர் (வணிகம்) தங்கபாண்டியன், உதவி மேலாளர் (தொ.நு) ராஜேஷ், உதவி மேலாளர் பயிற்சி ராஜ் மோகன் கும்பகோணம்1 கிளை மேலாளர் சுரேஷ் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் உள்ளிட்ட நூற்றுக் கணக்கானோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

# பவானி தெற்கு நகரச் செயலாளர் ப.சீ.நாகராஜன் மறைவு!

## சு.முத்துசாமி – என்.நல்லசிவம் – தோப்பு என்.டி.வெங்கடாசலம் அஞ்சலி!

ஈரோடு, டிச. 10-

ஈரோடு மாவட்டம், பவானி நகர கழக செயலாளராக தொடர்ந்து 25 ஆண்டு காலம் களப்பணியாற்றி தமிழகத்தில் சிறந்த நகரக் கழக செயலாளராக பணியாற்றினார் என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பொற்கரங்களால் விருது பெற்ற ப.சீ.நாகராஜன் நேற்று (9.12.2025 - செவ்வாய்க்கிழமை) அதிகாலை உடல் நலக்குறைவு காரணமாக காலமானார் என்கிற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.



அன்னாருக்கு சந்திரா என்கின்ற மனைவியும், இளங்கோ என்ற மகனும், முத்தழகி, ஷீலாதேவி என்கின்ற இரு மகள்களும் உள்ளனர். மேலும் இவரின் மருமகள் சிந்தூரி இளங்கோ பவானி நகர் மன்ற தலைவராக உள்ளார்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்த ஈரோடு தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி, ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், ஈரோடு மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பேரூர், ஊராட்சி, வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகி கள், உள்ளாட்சி பிரதிநிதி கள், அனைத்துக் கட்சி பிரமுகர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நேற்று (9.12.2025 - செவ்வாய்க்கிழமை) மதியம் 4 மணி அளவில் பவானியின் மயானத்தில் நடைபெற்றது.

# மருத்துவ மாணவிக்கு நிதியுதவி!

## அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வழங்கினார்!

தஞ்சாவூர், டிச.10 -

தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் பகுதியைச் சேர்ந்த ஏழ்மை நிலையிலுள்ள மருத்துவ மாணவி கல்விக்கு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் நிதியுதவி வழங்கி உதவினார்.

தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருப்பனந்தாள் வடக்கு தெருவை சேர்ந்தவர் சரவணன் மற்றும் ஜான்சி ராணி தம்பதியரின் மகள் நேசிகா. ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த இந்த மாணவி மருத்துவப் படிப்பு பயில நிதி நெருக்கடியில் இருந்து வந்தார். இதனையறிந்த உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் மாணவியின் நிலையறிந்து அவரது மருத்துவப் படிப்பிற்கு முதற்கட்டமாக ரூ.50 ஆயிரம் நிதி உதவியை மாணவியின் பெற்றோரிடம் வழங்கினார்.

இந்நிகழ்வின் போது திருப்பனந்தாள் மேற்கு ஒன்றிய செயலாளர் கோ.க. அண்ணாதுரை, தஞ்சாவூர் வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் துணை அமைப்பாளர் செல்வகுமார் கட்சி நிர்வாகி ஸ்டாலின் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.




விழுப்புரம் மாவட்டம் செஞ்சி, திண்டிவனம் ஆகிய தொகுதிகளில் கிராமப்புறங்களில் இளம் விளையாட்டு வீரர்களை உருவாக்கும் வகையில் சிறு விளையாட்டு அரங்கங்கள் அமைப்பதற்கு முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். இதையடுத்துசெஞ்சி தொகுதி அவலூர்பேட்டையில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பணியை தொடங்கி வைத்தார். உடன்விழுப்புரம் மாவட்ட கூடுதல் ஆட்சியர் பத்மஜா,மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், மாவட்டக் கவுன்சிலர் செல்வி ராம சரவணன் ஒன்றிய கவுன்சிலர் ஷாகின் அர்ஷத்,ஊராட்சி மன்றத் தலைவர் செல்வம் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.



விழுப்புரம் நகரம், மந்தக்கரையில், துணை முதலமைச்சர்அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் மற்றும் மதிய உணவு வழங்கினார். உடன் எஸ். வெற்றிவேல், சி.ஆர்.ஜெ.ராஜா, கோ.பார்த்திபன், ராஜா, முகமது அலி, சண்முகம், வீரப்பன், பாஸ்கர் மற்றும் சி.கற்பகமூர்த்தி, ஜமாலுதீன், புருஷோத்தமன், லெனின் விஜய், பூந்தோட்டம் சண்முகம், செ. மணிகண்டன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், அயன்செங்கல்படை ஊராட்சி, அருணாச்சலபுரம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக்கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ. வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்து பயனாளிகளுக்கு பொருட்களை வழங்கினார். நிகழ்வில் ஒன்றியச் செயலாளர்கள் அன்புராஜன், ராதாகிருஷ்ணன் மாவட்டப் பிரதிநிதிகள் புதுராஜன், ஆதிசங்கர், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.